# தமிழர்களின் பெருமைமிகு அடையாளம் இசைஞானி இளையராஜா!

## பிறந்தநாளையொட்டி — முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூன். 3-

பலதரப்பட்ட இசைகளில் கரைகண்டு தமிழர்களின் பெருமைமிகு அடையாளமாகத் திகழ்கிறார் இசைஞானி இளையராஜா என்று அவரது பிறந்தநாளில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இசைஞானி இளையராஜா அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**நாட்டுப்புற இசை, மெல்லிசை, துள்ளலிசை, மரபிசை, தமிழிசை, மேற்கத்திய இசை என அனைத்திலும் கரைகண்டு தமிழர்களின் பெருமைமிகு அடையாளமாகத் திகழும் இசைஞானி இளையராஜா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தங்களின் சிம்பொனி இசை தமிழ்நாட்டில் ஒலிக்கவுள்ள ஆகஸ்ட் 2ஆம் நாளுக்காகக் கோடிக்கணக்கான இரசிகர்களில் ஒருவனாக நானும் காத்திருக்கிறேன்.**

**நேற்றும் இன்றும் என்றும் தங்கள் இசை ராஜாங்கத்தின் ஆட்சிதான்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தொலைபேசி மூலம் வாழ்த்து!**

மேலும், இசைஞானி இளையராஜா அவர்களை தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பிறந்தநாள் வாழ்த்தினை தெரிவித்துக்கொண்டார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடிடுவோம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், ஜூன் 3 -

"என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே" எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட ஆம்பூர், வாணியம்பாடி, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ளடங்கிய கிளைக் கழகங்கள், வார்டு கழகங்கள் தோறும் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இனிப்புகள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி சார்பில் இன்று (03.06.2025 - செவ்வாய்க்கிழமை )காலை 8.30 மணியளவில் ஜோலார்பேட்டை எஸ்.கோடியூர் முதல் ஜங்ஷன் பேருந்து நிறுத்தம் வரை ஊர்வலமாக சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் இன்று (03.06.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு திருப்பத்தூர் பேருந்து நிலையம் முதல் பேரறிஞர் அண்ணா சிலை ஊர்வலமாக சென்று



அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி சார்பில் இன்று (03.06.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 8.00 மணிக்கு சுகம் மருத்துவமனை முதல் வாணியம்பாடி பேருந்து நிலையம் வரை ஊர்வலமாகச் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

ஆம்பூர் சட்டமன்ற தொகுதி சார்பில் இன்று (03.06.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 8.00 மணிக்கு ராஜிவ்காந்தி சிலை முதல் ஆம்பூர் பேருந்து நிலையம் வரை ஊர்வலமாக சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், நகர மன்ற தலைவர்கள், ஒன்றிய குழுத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு அவரின் புகழைப் போற்றி கொண்டாடுவோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கோடை காலத்தில் ஏற்படும் நோய்களை தடுக்கும் பொருட்டு

# நெல்லையில் 20000 பேருக்கு மூலிகை குடிநீர்!

## மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான் ஏற்பாட்டில்!

நெல்லை.ஜுன்.3–

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி கோடை காலத்தில் ஏற்படும் உஷ்ண நோய்களான மஞ்சள் காமாலை,பித்த ஆதிக்கம்,காய்ச்சல்,இருமல் போன்றவற்றை தடுக்கும் நோக்கில் முன்னாள் அமைச்சர் மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான் ஏற்பாட்டில் நெல்லையில் கடந்த 2105 2025 முதல் 31052025 வரை 10 நாட்கள் "சீந்தில் குடிநீர்" பிரச்சார ஜீப் மூலம் சுமார் 20,000 நபர்களுக்கு இக்குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி மேலப்பாளையம் சந்தை முக்கு, மேலப்பாளையம்உழவர் சந்தை, பஜார் திடல், பாளையங்கோட்டை மகாராஜா நகர்,உழவர் சந்தை, மேலப்பாளையம் சந்தை முக்கு,குறிச்சி சந்திப்பு,மேலப்பாளையம் அரசு மருத்துவமனை,பாளையங்கோட்டை பெரியார் நகர்,இந்திரா நகர்,அரசு பொது மருத்துவமனை,நெல்லை டவுண் தூய்மை பணியாளர் குடியிருப்பு நெல்லையப்பர் கோவில்,சாலியர் தெரு ஆகிய பகுதிகளில் விநியோகம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட அவைத்தலைவர் முருகன்,துணைச் செயலாளர் கிரிஜா குமார்,மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், சரவணன்,பகுதி செயலாளர் நமச்சிவாயம்,சார்பு அணி அமைப்பாளர் கள் கருப்பசாமி கோட்டையப்பன், நவநீதன்,பல்க் குமார்,ஸ்டீபன்,இனியன், பெப்சி சரவணன்,ஷேக் தாவுது,தளபதி ஆறுமுகம்,துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன்,அந்தோணி என்ற செட்டி, பெரோஸ்கான்,சிவனு பாண்டியன்,புகாரி, ஸ்ரீ ராம், ஜமீலா, காஜா,சைபு நிஷா,பத்மா, ஜோதி பிரியா,ஆனி ரேக்லண்ட்,பிந்து யாஸ்மின்,பூங்கனி,ஏஞ்சல்,மகாராஜன், சிவக்குமார்,கணேச சுப்பிரமணியன்,

ராஜகனி,பெருமாள்,அசன் ராஜா,சித்திக், மாரி,செய்யது சுலைமான்,வட்டச் செயலாளர்கள் முறுக்கு சாகுல், சாலிமவுளானா, ஆறுமுக பாண்டியன், இசக்கி,பகுதி துணைச் செயலாளர் ஆமினா சாதிக்,பத்மராஜ்,ஆவின் கல்யாணி,புயல் மீனாட்சி, வேல்முருகன், ராஜ்,லெனின்,மணிகண்டன், கேபிள் குமரேசன்,மாமன்ற உறுப்பினர்கள் அல்லா பிச்சை, சுந்தர், நித்திய பாலையா உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு மற்றும் திருச்சி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 03.06.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 5.00 மணி | திருச்சி தெற்கு | தனரெத்தினம் மஹால், பழைய பால் பண்ணை அருகில், தஞ்சாவூர் பிரதான சாலை, திருச்சி. |
| 04.06.2025 புதன்கிழமை | காலை 9.30 மணி | திருச்சி வடக்கு | ஸ்ரீ தனலட்சுமி மணி மஹால், உளுந்தங்குடி பைபாஸ் சாலை பாலம் அருகில், மண்ணச்சநல்லூர், திருச்சி. |
| | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | கலைஞர் அறிவாலயம், கரூர் பைபாஸ் சாலை, திருச்சி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன், விழுப்புரம், அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா பாடப் புத்தகங்களை வழங்கினார்.

# காலம் வென்று வாழும் கலைஞர் தெய்வம்!

# கழகம் கோயில்!!



**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்.** (திருக்குறள் 50)

தந்தைபெரி யார்காலம் தொட்டு, இன்றும்
தமிழ்தமிழர் அடிமையாகா உரிமை வேட்கை
செந்தமிழ்நம் தாய்மொழிக்கும் தாய்மண் ணிற்கும்
தகுதகைமை வழிகாணும் செயலின் ஆக்கம்
முந்திஎழும் வகைவாகை தேடிச் சூடி
முத்தமிழும் வளர்கின்றது என்றால் அந்த
விந்தைதி முகழகத்தைக் காலம் காத்த
வினைதிட்பக் கோக்கலைஞர் வினையால் அன்றோ!

தாய்மண்ணைத் தமிழ்மொழியை மேம்படுத்தித்
தமிழ்நாடு பெயர்சூட்டி மறைந்தார் அண்ணா!
ஆய்ந்தபெரும் மொழிக்களப்போர் மீண்டு வெற்றி
அறிஞரண்ணா கைதந்த தமிழர் நாட்டை
தோய்ந்துதோய்ந்து அடிநாட்கள் தொட்டு, தன்னின்
துடிப்புணர்ச்சி வேகத்தால் ஈகத் தாலே
வாய்த்தபெரும் தலைமையினால் என்றென் றைக்கும்
வாழும் தி மு.கழகமாகக் கலைஞர் கண்டார்!

சோதனைகள் ஒன்றிரண்டா எத்த னையோ
துன்பக்கடல் நீந்திநீந்திப் பயிற்சி பெற்று
வேதனைகள் சுடந்துகரை யேறும் ஈடில்
வெற்றிகுவி அற்புதத்தால் கலைஞர் கோமான்
போதனைகள் நீதிக்கட்சி பெரியார் அண்ணா
புடம்போட்ட கருத்துவழிப் போராட் டத்தால்
சாதனைகள் ஆட்சிகண்டார் மீண்டும் சூழ்ச்சி
தமைபன்னி ரெண்டாண்டுகடந் தேவென்றாரே!

இடைப்பட்ட ஆட்சிவாராக் காலம் தன்னில்
இரண்டகத்தார் தந்தகொடுங் கோலின் வஞ்சத்
தடைகளினை அமைதிவழி தகர்த்தெ றிந்தார்
சாகாத வரம்பெற்றார் சரித்தி ரத்தில்
நடைகள்தடு மாறுநடுவ ணரசிற் கும்தான்
நன்றுசெங்கோல் சமநீதி தந்து காத்தார்
கொடைகோடி கோடிகொடுத் தாலும் நம்மின்
கொள்கைக்கோ கலைஞர்க்கே ஈடா காதே!

வானத்தின் விண்மீன்கள் தனைத்தி ரட்டி
மாலைபுனைந் தேகலைஞர் கழுத்தில் சூட்டி
தானத்தின் கதிர்மதியின் ஒளிவெள் ளங்கள்
தனைஒன்றாய்க் குவித்துமணி மகுடம் மாக்கி
மானத்தின் தலைமகன்நம் கலைஞ ருக்கே
மரியாதை நன்றிதனைக் கூறி னாலும்
ஆனதி மு.கழகத்தை மீட்டுத் தந்தே
அறம்காத்த மோனத்திற்(கு) ஈடா காதே!

பொறுமைக்கே இலக்கணம்யார்? கலைஞ ரேதான்
பொறாமைபுதைத் தெழுகலைஞர் புனிதர் அன்றோ?
சிறுமைகண்டு பொங்கிஅழி அரிமா அண்ணல்
சித்தர்களுக் கெலாம்கலைஞர் சித்தர் கோவே!
வறுமைப்பிணி தமிழ்நாட்டில் வாரா வண்ணம்
மாண்பாட்சி வித்தகர்கோ கலைஞ ரேதான்
உறுதியிலும் உறுதிநெஞ்சத் துணிவால் மீட்சி(நம்)
உரிமைகளுக்(கு) அடித்தளமாய் அமைக லைஞர்!

இன்னும் ஓர் நூற்றாண்டும் இருப்பார் என்றே
எண்ணியேநம் தமிழரெல்லாம் மகிழும் போதில்
தன்னேரில் மகன் இஸ்டாலின் தனக்கா சானாய்த்
தமிழ்நாட்டின் மாத்தலைமைத் தகுதி தந்து
மன்னாத பெருமைமெரினாக் கடற்க ரையில்
மகன் தந்தைக்(கு) ஆற்றுதவி யாக வாரி
நன்றலைகள் காலமெலாம் வாழ்த்தும் தந்தை
நாடெல்லாம் வணங்க இஸ்டாலின் அருமை செய்தார்

ஓயாத தேனூற்றின் வருகை யைப்போல்
உயிர்காக்கும் மருந்துமர வளர்ச்சி யைப்போல்
சேயாகத் தமிழர்தம் தலைமு றைகள்
செந்தமிழர் பரம்பரைகள் போற்று மாறு
வாயார மனமார தமிழ்மக் கள்தாம்
வாழ்த்தமகன் உன்னதத்தின் ஆட்சிப் போற்றத்
தாயாகத் தந்ததமிழ்க்கோ கலைஞர் தெய்வம்!
தமிழரெல்லாம் தலைவணங்கும் கழகம் கோயில்!

கலைஞரைப்போல் ஒருதலைவர் உலக ரங்கில்
காணுவதோ அரிதாமவர் தமிழர் ஈதால்
நிலைஉலகம் உண்மைஅறி யாதல் கூடும்
நெடிதுபுகழ்க் கிலக்கான சமத்து வத்தின்
உலைகொதிக்கும் ஆக்கமுறைஎல் லோர்க்கும் எல்லாம்
உரிமைகிடைக் கின்றவகை செய்நம் முதல்வர்!
தலைமைக்கும் தலைமை யாம்நம் தலைவ ராலே
தமிழ்க்கோவாம் கலைஞர்புகழ் உலகே போற்றும்!



பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**
(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)